கான இயல் பயிற்சியாளர்களுக்கு உதவிப் பணம்.

*884 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணையில் உள்ள கான் இயல் பயிற்சிப் பள்ளியில், பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி (டிரைனிங் அலவன்ஸ்) உதவிப்பணம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மின் கட்டணச் சலுகை

*885 வினா—திரு கே. ஏ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி, வாலாஜா தாலுக்கா ஆகிய பின்தங்கிய வட்டங்களுக்கு மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தற்சமயம் வந்தவாசி, வாலாஜா தாலுக்காக்கள் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாகக் கருதப்பட வில்லை. எனவே அந்தத் தாலுக்காக்களுக்கு தற்சமயம் மின் கட்டணச் சலுகைகள் எதுவும் அளிக்கப்படவில்லை.

மதுரையில் நகரப் பேருந்துகள்.

*886 வினா—திரு பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மதுரை நகரில் தேசிய மயமாக்கப்படும் நகரப் பேருந்துகளுக்கு (City Buses) பதில் அரசு போக்குவரத்துத் துறை பேருந்துகள் விட ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, மதுரை நகரில் ஓடுகின்ற நகரப் பேருந்துகளை இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்து நடத்துகிறது. அது மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை நாங்கள் எல்லாம் அனுபவ ரீதியாக அறிகிறோம். ஆகவே, மதுரை நகரிலிருந்து ஓடக்கூடிய எல்லா நகரப் பேருந்துகளையும் இந்தப் பாண்டியன் போக்குவரத்துக் கழகமே எடுத்து நடத்த அரசு ஆவனச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.